# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:168** **தேதி:-07.09.2014**

## BSNL சேமநலக் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

04.09.2014 அன்று நடைபெற்ற BSNL சேமநலக் கூட்ட முடிவுகள் சிலவற்றை கீழே கொடுத்துள்ளோம்.

1. தொழிற்சங்கத்தில் நிர்வாகியாக உள்ள ஓய்வு பெற்ற ஊழியரையும், சேம நலக் குழுவின் உறுப்பினராக சேர்க்கும் வகையில் சேமநலக் குழுவின் அமைப்பு சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்கின்ற BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டது.

2. தற்போது அங்கீகார காலம் என்பது மூன்று ஆண்டுகள் என்றாகி விட்டதால், தொழிற்சங்கங்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் பதவிக் காலமும் மூன்றாண்டுகள் என்று மாற்றம் செய்யப்பட வேண்டும் என்கின்ற BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. பல் வேறு கல்வி ஊக்கத்தொகை (Scholarship)களை அதிகரிக்கும் வகையில் சேம நலக்குழுவிற்கு BSNL வழங்கும் தொகையினை தற்போதுள்ள 9 கோடியிலிருந்து 12 கோடி ரூபாய்களாக உயர்த்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியது. விவாதத்திற்கு பின் கல்வி ஊக்கத்தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை உறுதி செய்ய ஒரு குழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டது. அதன் முடிவுகளுக்கு பின் BSNL வழங்கும் தொகையினை உயர்த்துவது தொடர்பாக முடிவு செய்யப்படும்.

4. கல்வி ஊக்க தொகை வழங்குவதற்கு BACHELOR OF FASHION TECHNOLOGY யை தொழில் நுட்பக் கல்வியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5. அனைத்து ஊழியர்களின் ஊதியத்தில் இருந்தும் ஒரு சிறு தொகையை பிடித்தம் செய்து அதனை இறந்து போகும் ஊழியர்களின் குடும்பத்திற்கு இறப்பு நிவாரணமாக வழங்கலாம் என BSNL ஊழியர் சங்கம் கோரியது. தற்போது 2,44,000 ஊழியர்கள் இருப்பதாகவும், ஆண்டொன்றுக்கு 1800 ஊழியர்கள் இறக்கிறார்கள் என்றும் நிர்வாகம் தெரிவித்தது. விவாதத்திற்கு பின் ஊழியர்களின் ஊதியத்தில் இருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.10/- பிடித்தம்

செய்யலாம் என்றும் அதன் மூலம் தற்போதுள்ள இறப்பு நிவாரணத்தை ரூ.10,000/த்திலிருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. விருப்பம் இல்லாதவர்கள் இந்த திட்டத்தில் இருந்து விலகி இருந்துக் கொள்ளலாம். அடுத்தக் கூட்டத்தில் இந்த முடிவை பரிசீலிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

6. பணி ஓய்வு விழாவிற்கான செலவுத் தொகை வரம்பினை ரூ.3,500/-லிருந்து ரூ 5,000/-ஆக உயர்த்தப்பட்டது.

7. இயற்கை பேரழிவுகள்/ மதக்கலவரங்கள்/ பயங்கரவாதிகளின் தாக்குதல்/ தீவிரவாதிகளின் தாக்குதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கான பொருளாதார உதவித் தொகையினை ரூ.5,000/-த்திலிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்தது. விவாதத்திற்கு பின் அந்த தொகையினை ரூ.7,000/-ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. (இந்த பட்டியலலிருந்து கொள்ளை என்பது எடுக்கப்பட்டு விட்டது)

நிதிப்பற்றாக்குறையை காரணம் காட்டி BSNL ஊழியர் சங்கம் கொண்டு சென்ற பல் வேறு பிரச்சனைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**